1981 ஆகஸ்ட் 27]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 264 தொழிற் சாலைகள் இருக்கின்றன. அவற்றிலே பல தொழிற்சாலைகள் சுகாதார இலாக்காவின் சான்றிதழைப் பெறாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படிச் சான்றிதழ் வாங்காத தொழிற் சாலைகளை மூடிவிடுவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா? தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்ற இத் தொழிற் சாலைகளுக்கெல்லாம் இவ்வாறு கழிவு நீரை ஆவியாக்கி வெளி யேற்றும் செலவிற்காக நாமே கடன் கொடுத்து கண்டிப்பாக இந்த முறையினைப் பின்பற்ற வேண்டும் என்ற வகையிலே நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்பது எளிது. ஆனால் அதிலே பல பிரச்சினைகள் எழும். இருந்தாலும் தாட்சண்யம் காட்டாமல் படிப்படியாக உறுதியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் பேருந்துப் பணி.

* வினா எண். 96— திரு ரா. கு. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-மேல அரசடி வழியாக துரைச்சாமிபுரம் வரை முன்பு ஓடிக் கொண்டிருந்த லயன் பஸ் வெகு நாட்களாக நின்றுவிட்டது. மேற்படி ரூட்டில் பஸ் விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் தடத்தில் சாலை பழுதுபட்டிருந்ததால் பேருந்து ஓடவில்லை. தற்போது சாலை சீர் செய்யப்பட்டு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசி வாரத்திலிருந்து பேருந்து ஓடு கிறது.

மானாமதுரைத் தொகுதியில் டீசல் விநியோகம்.

* வினா எண் 97.— திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மானாமதுரைத் தொகுதியில் டீசல் சரிவர விநியோகம் செய்யப்படாததின் காரணமாக பம்பு செட்டுகள் ஓடாமல் இருப்பதாலும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் இயங்காமல் இருப்பதாலும் விவசாயிகள் படும் அல்லலைப்போக்க ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?